



தன் இன்னுயிரை இழக்கும் தருணத்திலும், பிஞ்சு உயிர்களைக் காப்பாற்றினார், காங்கேயத்தைச் சேர்ந்த ஓட்டுநர் சேமலையப்பன். முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி காங்கேயத்தில் சேமலையப்பன் இல்லத்திற்கு நேரடியாகச் சென்று, அவரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஆறுதல் தெரிவித்தார். அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் உடனுள்ளார்.





கலைஞரின் வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாம்களை சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி தொடங்கி வைத்தார். கீழ்பென்னாத்தூர் தொகுதிக்குட்பட்ட கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியம் சோமாசிபாடி மற்றும் துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம் சாணானந்தல் கிராமங்களில் நடைபெற்ற கலைஞரின் வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாம்களை சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில்; ஒன்றிய செயலாளர்கள் வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், பாரதிராமஜெயம், இரா.ராஜேந்திரன் ஒன்றிய குழுத் தலைவர்கள்; தமயந்தி ஏழுமலை, அய்யாகண்ணு, பொதுக்குழு உறுப்பினர் பாலு,ஒன்றிய பிரதிநிதிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

# சீதை பதிப்பகத்தின் 32 நூல்கள் அறிமுகம்!

## நூல்களை – கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வெளியிடுகிறார்! அரசு கொறடா கோவி.செழியன் பெற்றுக் கொள்கிறார்!

சென்னை,ஜூலை 28-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சீதை பதிப்பகத்தின் 32 நூல்கள் அறிமுக விழா நடைபெறுகிறது.

இன்று (28.7.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை- தியாகராயர் நகர் - ஜி.என்.செட்டி சாலையில் அமைந்துள்ள சர்.பிட்டி. தியாகராயர் அரங்கில் நடைபெறும் இவ்விழாவுக்கு மூத்த பத்திரிகையாளர் கோவி. லெனின் தலைமை வகிக்கிறார்.

கௌரா ராஜசேகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

32 நூல்களையும் - கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வெளியிட்டுச் சிறப்புரையாற்றுகிறார்.

நூல்களை - தமிழ்நாடு அரசு கொறடா கோவி. செழியன் பெற்றுக்கொள்கிறார்.

இவ்விழாவில் - திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் உமா, திராவிட இயக்க ஆய்வாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, திராவிட இயக்க உணர்வாளர் முனைவர் இரா.குணசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

---

### கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் சகோதரி

# திருமதி யமுனா மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல்!



சென்னை, ஜூலை 28 -

கழக விவசாய அணிச் செயலாளரும், தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதியுமான ஏ.கே.எஸ். விஜயனின் சகோதரியும் தஞ்சை ஈஸ்வரி நகரைச் சேர்ந்த மருத்துவர் சம்பத்குமார் மனைவியுமான திருமதி யமுனா அவர்கள் (வயது 67) நேற்று முன்தினம் (26.07.2024) காலை உடல் நலக் குறைவு காரணமாக இயற்கை எய்தினர் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த யமுனா - டாக்டர் சம்பத்குமார் இணையருக்கு டாக்டர் அருண், டாக்டர் அசோக் ஆகிய இரு மகன்கள் உள்ளனர்.

தஞ்சை ஈஸ்வரி நகரில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்ட உடலுக்கு கழகத்தினர் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (27ஆம் தேதி) காலை 10 மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டது.

இம் மறைவுச் செய்தியறிந்து - அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த செய்தியில்,

**“புதுடெல்லியில் தமிழ் நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதியாக உள்ள ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களின் சகோதரி திருமதி யமுனா அவர்கள் இயற்கை எய்திய தகவல் அறிந்து உடனடியாக, திரு. ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, என்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்ட தோடு, அவருக்கு ஆறுதலையும் தெரிவித்தேன்”**

- என்று குறிப்பிட்டுள்ளார்.

---

### தமிழ்நாட்டில் பி.எஸ்.என்.எல். வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளும்

# சிக்னல் - நெட்வொர்க் சிக்கல்களைத் தீர்க்க எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 28-

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் டெலிடென்சிட்டி தொலைத்தொடர்பு பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரிக்கவும், அதன் கீழ் வரும் நகர்ப்புற/கிராமப் பகுதிகளில் தடையின்றி 3ஜி/4ஜி/5ஜி இணைப்புகளை வழங்கவும் அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில்தி.மு.க.வின் வேலூர் மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் எம்பி கேள்வி எழுப்பினர்.



வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் டெலிடென்சிட்டி தொலைத்தொடர்பு பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரிக்கவும், அதன் கீழ் வரும் நகர்ப்புற/கிராமப் பகுதிகளில் தடையின்றி 3ஜி/4ஜி/5ஜி இணைப்புகளை வழங்கவும் அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகள் என்ன?

கடந்த மூன்று வருடங்களில் லேண்ட்லைன் மற்றும் பிராட்பேண்ட் இணைப்புகளை சரண்டர் செய்த பழைய சந்தாதாரர்களுக்கு ‘ரீஃபண்ட்’ தொகையாக பெரும் தொகையை இன்னும் செலுத்த வேண்டிய BSNL ஏதாவது சிக்கலை எதிர்கொள்கிறதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளில் BSNL சேவைகளை துண்டித்த மொத்த வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை; மற்றும் தமிழ்நாடு மாநிலத்தில் BSNL இன் வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளும் சிக்னல் மற்றும் நெட்வொர்க் சிக்கல்களைத் தீர்க்க BSNL ஆல் எடுக்கப்பட்ட / எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன?

ஒன்றிய அரசின் தகவல் தொடர்பு மற்றும் ஊரக வளர்ச்சிக்கான ராஜாங்க அமைச்சர் டாக்டர் பெம்மாசானி சந்திர சேகர் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம்

வேலூர் மாவட்டத்தில் 4,301 பேஸ்டிரான்ஸ்ஸீவர் நிலையங்கள் (BTSs) 2G/3G/4G/5G மொபைல் இணைப்பை வழங்குகின்றன.

யுனிவர்சல் சர்வீஸ் ஒப்லிகேஷன் ஃபண்ட் (USOF) நிதியுதவியின் மூலம், நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களிலும் மொபைல் நெட்வொர்க் கவரேஜை வழங்குவதற்காக 4G செறிவூட்டல் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களை அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது.

4ஜி சாச்சுரேஷன் திட்டத்தின் கீழ், வேலூர் தொகுதியில் 14 தளங்களை பிஎஸ்என்எல் திட்டமிட்டுள்ளது.

லேண்ட்லைன் மற்றும் பிராட்பேண்ட் இணைப்புகளை ஒப்படைத்த BSNL சந்தாதாரர்களுக்கு நிலுவைத் தொகை கழித்த பிறகு திருப்பி அளிக்கப்படுகிறது. FTTHக்கு மாற்றப்பட்டால் பணத்தைத் திரும்பப் பெறுவது பொருந்தாது.

கடந்த மூன்று ஆண்டுகளில் BSNL பிராட்பேண்ட் மற்றும் FTTH துண்டிக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

ஆண்டு 2021-22 ஆண்டு 33,56,639 அகன்ற அலைவரிசை மற்றும் FTTH 3,94,512 துண்டிக்கப்பட்டது.

2022-23 ஆண்டு 6,09,760 அகன்ற அலைவரிசை 6,02,306 FTTH துண்டிக்கப்பட்டது.

2023-24 ஆண்டு 11,23,005 அகன்ற அலைவரிசை 7,83,781 FTTH துண்டிக்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

---

### திருத்தணி கோயிலில் தரிசன கட்டணம் குறைப்பு

சென்னை, ஜூலை 28-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ஆடிக்கிருத்திகை மற்றும் திருப்படி திருவிழா ஆகிய இரண்டு திருவிழாக்களுக்கு சுவாமி தரிசனம் செய்திட சிறப்பு வழி தரிசன கட்டணம் ரூ.200/ லிருந்து ரூ.100/ ஆக குறைக்கப்பட்டுள்ளது என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

அறுபடை வீடுகளில் ஐந்தாம் படைவீடு என்று போற்றப்படும் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ஆடிக்கிருத்திகை திருவிழா, டிசம்பர் 31 மற்றும் ஜனவரி 1 தேதிகளில் நடைபெறும் திருப்படி திருவிழாவிற்கு தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகைதந்து சுவாமி தரிசனம் செய்கின்றனர்.

---

### தர்மபுரி – தொப்பூர்

# தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்!

## முன்னாள் எம்.பி. டாக்டர் செந்தில் குமாருக்கு ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி கடிதம்!

புதுடெல்லி, ஜூலை 28-

தர்மபுரி - தொப்பூர் தேசிய நெடுஞ்சாலை பணிகள் விரைவில் தொடங்க இருப்பதாக தர்மபுரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் செந்தில் குமாருக்கு சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்த விவரம் வருமாறு:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் டி.என்.பி.எஸ்.செந்தில் குமார் கடந்த சில தினங்களுக்கு முன்பு டெல்லி சென்று அங்கு பழங்குடியினர் விவகாரத் துறை அமைச்சர் ஜில் ஓரம் அவர்களை சந்தித்து குறும்பர் லம்பாடி இன மக்களை பழங்குடி பட்டியலில் இணைக்கும் தொடர் முயற்சியின் 17 வது தனிநபர் மசோதா குறித்து நடவடிக்கை எடுக்க நேரில் சென்று வலியுறுத்தி இருந்தார்.

தொடர் நடவடிக்கையாக ஒன்றிய கப்பல் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சக அதிகாரிகளை டெல்லியில் சந்தித்து தொப்பூர் மலைப் பாதை சீரமைப்பு மற்றும் ஏற்கனவே கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்ட பாளையம்புதூர் பகுதியில் மேம்பாலம் மற்றும் அகரம் கூட்ரோடு பகுதியில் மேம்பாலம் அமைப்பது குறித்து அனுப்பப்பட்ட கடிதம் குறித்து அதிகாரிகளிடம் அறிவுறுத்தி இருந்திருந்தார். அதன் தொடர் நடவடிக்கையாக ஒன்றிய கப்பல் மற்றும் சாலை போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி தர்மபுரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமாருக்கு கடிதம் மூலம் தனது பதிலை அனுப்பி உள்ளார் .

அதில் தொப்பூர் மலைப் பாதை என்எச் 44 பாதை சீரமைப்பணிகள் விரைவில் தொடங்க இருப்பதாகவும் மற்றொரு கடிதத்தில் காரிமங்கலம் அகரம் பகுதி மற்றும் பாளையம்புதூர் பகுதியில் சாலையை கடக்கும் பகுதியில் மேம்பாலம் கோரிக்கை குறித்து அப்பகுதியில் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு Underpass சாலை அமைக்க அதிகாரிகள் ஆய்வு செய்து வருவதாகவும் அமைச்சர் பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுப்பட்டி மிசா சொக்கலிங்கம்

ஜூலை 28 (2007)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, சிறுவயது முதலே திராவிட இயக்கத்தில் பற்றுடையவராகவும், கழகம் துவக்கப்பட்ட காலத்தில் கழகத்தின் வளர்ச்சிக்கும் பாடுபட்டவர்.

திருப்பத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளராக பலமுறை பொறுப்பு வகித்தவர்.

பழைய முகவை மாவட்ட கூட்டுறவு வங்கியின் இயக்குநராகவும், கழக ஆட்சிக்காலங்களில் பல்வேறு பொறுப்புகளையும் வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, மதுரை மத்திய சிறையில், மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை வே.ஆழ்வார்

ஜூலை 28 (2008)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

தொடர்ந்து பத்து ஆண்டுகளாக திருநெல்வேலி நகரச் செயலாளராகவும், கழகத்திற்கு சோதனை ஏற்பட்டபோது நகர பொறுப்பாளராகவும், பின்னர் பொதுக்குழு உறுப்பினராகவும் கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

திருநெல்வேலி நகர்மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய பல போராட்டங்களிலும் பங்கேற்றதோடு மட்டுமல்லாமல் குறிப்பாக, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.